# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 2 | 4 Pages | 03.08.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 2 | 4 பக்கங்கள் | 03.08.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ராட்சத கிரேன் சரிந்த விபத்தில் பலி எண்ணிக்கை 20 ஆக உயர்வு

### 2 தமிழக என்ஜினீயர்கள் பலியான சோகம்



மும்பை, ஆக. 3

மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்தில் சம்ருதி எக்ஸ்பிரஸ் சாலையில் சாபுர் என்ற இடத்தில் 3ம் கட்ட பணி நடைபெற்று வருகிறது. இங்கு இரண்டு தூண்களுக்கு இடையில் கான்கிரீட் தளத்தை தூக்கி வைப்பதற்காக பயன்படுத்தப்படும் கிர்டர் என்கிற ராட்சத இயந்திரம் நேற்று திடீரென சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. தகவலறிந்து போலீசார், தீயணைப்பு படையினர், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிருக்கு போராடியவர்களை மீட்டு அருகில் உள்ளமருத்துவமனைக்குஅனுப்பி வைத்தனர். மேலும் இடிபாடுகளை அகற்றி பலரை பிணமாக மீட்டனர். இதில் என்ஜினீயர்கள், ஊழியர்கள், தொழிலாளர்கள் என 20 பேர் உயிரிழந்தாக போலீசார் தெரிவித்தனர்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த என்ஜினீயர்கள் 2 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. இதில் ஒருவர் கிருஷ்ணகிரி மாவட்டம் போகனப்பள்ளி ஊராட்சி வி.ஐ.பி. நகரை சேர்ந்த சந்தோஷ்(36). மற்றொரு என்ஜினீயர் நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே ஆயக்காரன்புலம் பகுதியை சேர்ந்த கண்ணன்(23) என்பது தெரிய வந்தது. விபத்து குறித்த தகவலறிந்த அவர்களது குடும்பத்தினர் அதிர்ச்சியும், சோகமும் அடைந்தனர். விபத்து தொடர்பாக கட்டுமான நிறுவனத்தின் 2 ஒப்பந்ததாரர்கள் மீது சகாப்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அரியானா வன்முறைக்கு 5 பேர் பலி: ஊரடங்கு அமல்

சண்டிகர், ஆக. 3

அரியானா மாநிலம் நூ மாவட்டத்தில் விஸ்வ இந்து பரிஷத்தின் ஊர்வலத்தில் சிலர் கல் வீசித் தாக்கினர். அதைத்தொடர்ந்து இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதல் வன்முறையாக மாறியது.

வாகனங்களுக்கு தீவைக்கப்பட்டதுடன், கும்பல் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டதில் 2 ஊர்க்காவல் படை வீரர்கள் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். நூ மாவட்டத்தில் தொடர்ந்து பதற்றம் நிலவி வந்ததால் அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இணையசேவைமுடக்கப்பட்டது. இந்நிலையில், நூ மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த வன்முறையில் காயமடைந்த மேலும் 2 பேர் உயிரிழந்தனர். இதனால் மொத்த பலி எண்ணிக்கை 5 ஆக அதிகரித்தது. நூ மாவட்டத்தில் 50 போலீஸ் வாகனங்கள் உள்பட 120 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன, தீவைக்கப்பட்டன. 10 போலீசார் உள்பட 23 பேர் காயமடைந்தனர். வன்முறை தொடர்பாக 27 பேரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். பதற்றம் நிறைந்த பகுதிகளில் ஏராளமான போலீசாரும், துணை ராணுவ படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். நூ மாவட்டத்தில் போலீசார் கொடி அணிவகுப்பும் நடத்தினர். மேலும், முதல் மந்திரி மனோகர் லால் கட்டார் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், அனைத்து தரப்பினரும் அமைதி காக்க வேண்டும். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பதிவிட்டுள்ளார்

## டெல்லி காய்கறி சந்தைக்கு திடீரென விசிட் அடித்த ராகுல் காந்தி





புதுடெல்லி, ஆக. 3

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி சமீப காலமாக பொது இடங்களுக்குச் சென்று டிரைவர், விவசாயிகள், மெக்கானிக்குகள் போன்றோரைச் சந்தித்து வருகிறார். கடந்த மாதம் அரியானாமாநிலம்மதினாகிராமத்தில் விவசாயிகளுடன் விவசாயப் பணியில் ஈடுபட்ட ராகுல் காந்தி, சில பெண் விவசாய தொழிலாளர்களை தனது தாய் சோனியா காந்தி வீட்டுக்கு அழைத்து,

அவர்களுடன் மதிய உணவும் உண்டார். இந்நிலையில், தலைநகர் டெல்லியில் உள்ள ஆசாத்பூர் காய்கறி சந்தை ஆசியாவிலேயே பெரிய காய்கறி சந்தையாக கருதப்படுகிறது. இங்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அதிகாலை 4 மணியளவில் திடீரென சென்றார். அவரைப் பார்த்து ஆச்சரியமடைந்த காய்கறி வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் வணக்கம் கூறினர். ராகுல் காந்தியும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தார். சிலர் அவருடன் கைகுலு க்கினர். காய்கறி வியாபாரிகளுடன் உரையாடிய ராகுல் காந்தி, காய்கறி மற்றும் பழங்களின் விலை குறித்து விசாரித்தார். ராகுல் காந்தியுடன் ஏராளமான பாதுகாப்பு வீரர்களும் சென்றிருந்தனர். ஏற்கனவே ஆசாத்பூர் மண்டியில் தக்காளி விலை வெகுவாக உயர்ந்துவிட்டதால் அதை வாங்க தன்னிடம் பணமில்லை என காய்கறி வியாபாரி ஒருவர் கண்ணீர் சிந்தும் வீடியோவை ராகுல் காந்தி டுவிட்டரில் பகிர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கிரேன் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த 2 என்ஜினீயர் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி: முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஆக.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

மகாராஷ்டிரா மாநிலம் தானேயில்விரைவுச்சாலைதிட்டத்துக்கான பாலம் கட்டுமானபணியின் போது ராட்சத கிரேன் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர்களில் இருவர் கிருஷ்ணகிரி மாவட்டம், போகனப்பள்ளி ஊராட்சி, விஜபி நகரைச் சேர்ந்த சந்தோஷ் (வயது 36) மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம் ஆயக்காரன்புலத்தைச் சேர்ந்த கண்ணன் (23) என்றும் கேள்வியுற்று மிகுந்த வேதனை அடைந்தேன்.



இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை விமானநிலையத்திலிருந்து சொந்த ஊருக்கு கொண்டு செல்ல தமிழ்நாடு அரசின் பொதுத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் மூலம் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ்.மஸ்தான் மேற்கொண்டார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரு க்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

## கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு தினம்: மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதி பேரணி

சென்னை, ஆக. 3

சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது: தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசன கர்த்தாவாக, இலக்கியவாதியாக, திரைப்பட தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் 5 முறை முதலமைச்சராக, உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், அண்ணாவோடு தி.மு.க.வில்தொடர்ந்துபணியாற்றி அவரது மறைவுக்கு பின்னர் தி.மு.க.வின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கி கொண்டவர் கருணாநிதி.



அவரின் 5வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர், துணை பொதுச் செயலாளர்கள் உள்பட கட்சியின் முன்னணியினர் கலந்துகொள்ளும் அமைதி பேரணி வருகிற 7ந்தேதி (திங்கட்கிழமை) காலை 8 மணிக்கு சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலை அருகில் இருந்து புறப்படும். பின்னர் மெரினா காமராஜர் சாலையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படும். அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், இந்நாள், முன்னாள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், தலைமை கழக செயலாளர்கள், செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், மாநகராட்சி கவுன்சிலர்கள் மற்றும் தி.மு.க.வின் அனைத்து அணியினரும் கருணாநிதியின் நினைவை போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வர வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

## மேயர் வந்திருக்காரு, அதிகாரிகள் வர மாட்டாங்களா? கல்வித்துறை அதிகாரிகளுடன் கவுன்சிலர்கள் வாக்குவாதம்

திருப்பூர், ஆக. 3

திருப்பூர்மாவட்ட கலெக்டர்அலுவலக கூட்டரங்கில் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பள்ளி மேலாண்மை குழு பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் , துணை மேயர் பாலசுப்ரமணியம் , மண்டல தலைவர்கள் , மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிலையில் பள்ளி கல்வித்துறை சார்பில் முதன்மை கல்வி அலுவலர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. இதனால் மாநகராட்சி கவுன்சிலர்கள் பயிற்சி முகாமிற்கு வந்திருந்த பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகளிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மாநகராட்சி சார்பில் மேயர், துணை மேயர் , மண்டல தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் வந்திருக்கக் கூடிய நிலையில் பள்ளி கல்வித்துறை சார்பில் உயர் அதிகாரிகள் யாரும் ஏன் வரவில்லை என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி ஒரு வாரத்திற்கு முன்னதாகவே திட்டமிட்ட நிலையில் திடீரென முதன்மை கல்வி அலுவலருக்கு பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னையில் ஆய்வு கூட்டம் தேதி குறிக்கப்பட்டதால் அங்கு சென்று விட்டதாக அதிகாரிகள் தெரிவித்து மாமன்ற உறுப்பினர்களை சமரசம் செய்தனர். இதன்பின்னர் பள்ளி மேலாண்மை குழுவின் உரிமைகள் மற்றும் மேம்படுத்த வேண்டிய பணிகள் குறித்து பயிற்சி அளித்தனர்.

இதில் மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபட்டனர்.

## மணிப்பூர் சம்பவத்தை கண்டித்து திருப்பூரில் வக்கீல்கள் பேரணி ஆர்ப்பாட்டம்

திருப்பூர், ஆக. 3

திருப்பூர்மாவட்ட கலெக்டர்அலுவலகம் வந்தடைந்தனர். பெண் வழக்கறிஞர்கள் உட்பட 30க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். திருப்பூர்: மணிப்பூரில் மூன்று மாதங்களாக நடைபெற்று வரும் கலவரத்தை கட்டுப்படுத்தாத மத்திய மாநில அரசுகளை கண்டித்தும், அரசியல் சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டவும் வலியுறுத்தி திருப்பூர் மாவட்ட வழக்கறிஞர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு முழக்கங்கள் எழுப்பிய படி திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் வந்தடைந்தனர். பின்னர் அங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் பத்மநாபன் தலைமை வகித்தார். மூத்த வழக்கறிஞர் பி. மோகன், வழக்கறிஞர் முத்துலட்சுமி, வழக்கறிஞர் ரமணி, வழக்கறிஞர் சையது ஆகியோர் கண்டன உரையாற்றினர். பெண் வழக்கறிஞர்கள் உட்பட 30க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நிறைவாக வழக்கறிஞர் கோபிநாத் நன்றி கூறினார்.




## முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் பற்றி பேச்சு: சீமான் மன்னிப்பு கேட்க வேண்டும்-ஜவாஹிருல்லா அறிக்கை

சென்னை, ஆக. 3

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மணிப்பூர் வன்முறை வெறியாட்டங்களை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவித்த நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் அந்த ஆர்ப்பாட்டத்தில் பேசும் பொழுது கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் இழிவாகப் பேசியிருப்பதும் வாக்கு சேகரிக்க வரும் வேட்பாளர்கள் மீது அமிலம் வீசுமாறு வன்முறையை தூண்டும் வகையில் உரையாற்றியிருப்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் தொடர்ந்து வாக்களித்து வருவதால் "முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் சாத்தானின் பிள்ளைகளாய் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மாறிவிட்டார்கள்" என்று சீமான் பேசியுள்ளார். இந்த கயமைத்தனமான பேச்சு வன்மையான கண்டனத்துக்கு உரியது. தன் கட்சிக்கு வாக்களிக்காத காரணத்தினாலேயே கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் சாத்தானின் பிள்ளைகள் என்று வர்ணிப்பது அநாகரிகமானது, அருவருப்பானது, என்பதோடு அரசியல் நேர்மையற்ற செயலுமாகும்.

இதை வன்மையாக கண்டிக்கிறோம். சீமான் இதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும். முன்பு தாய் மதத்திற்கு திரும்புங்கள் என சங்பரிவார் தொண்டர்போல் பேசியவர்சீமான். தற்போதைய அவரது சிறுபான்மை வெறுப்பு பரப்புரை மூலம் தன்னை வெளிப்படையாகவே அம்பலப்படுத்தி கொண்டுள்ளார். இத்தகைய வேடதாரிகளிடம் தமிழக மக்கள் எச்சரிகையாகவே இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்

# நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பள்ளி மேலாண்மை குழு பயிற்சி கூட்டம்



திருப்பூர், ஆக. 3

'நம்பள்ளிநம்பெருமை" எனும் தலைப்பின் கீழ், திருப்பூர் மாவட்ட ஒருங்கிணந்த பள்ளி கல்வி துறை சார்பில் நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பள்ளி மேலாண்மை குழு பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் குழந்தைகளின் இலவசகட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009ன் முக்கிய அம்சங்கள் மற்றும் பள்ளி திட்டமும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு குறித்து விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு மாநகர செயலாளர் மாண்புமிகு மேயர் ந. தினேஷ்குமார் அவர்களும், துணை மேயர் ஆர் பாலசுப்ரமணியம் அவர்களும், மண்டல தலைவர்கள் உமாமகேஸ்வரி வெங்கடாசலம், கோவிந்தராஜ் அவர்களும், கல்வி குழு தலைவர் திவாகர் அவர்களும், மாமன்ற உறுப்பினர்களும் மற்றும் ஏராளமானோர்கலந்துகொண்டனர்.

# பல்லடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராமக் குடிநீர் மற்றும் சுகாதார மேலாண்மை உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்



பல்லடம், ஆக. 3

பல்லடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராம குடிநீர் மற்றும் சுகாதார மேலாண்மை உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றிய குழுதலைவர் தேன்மொழி தலைமையில் நடைபெற்றது.

ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாலசுப்ரமணியம் முன்னிலை வகித்தார். இதில் அஸ்வத் தொண்டு நிறுவன மேலாண்மை இயக்குனர் செல்வராஜ், குடிநீர் வடிகால் வாரிய தொழில்நுட்ப உதவியாளர் ரம்யா, ஆகியோர் கிராம ஊராட்சிகளில் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தரம், பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, தண்ணீரில் கலந்துள்ள வேதிப் பொருட்களை அறிந்து கொள்வது எப்படி? என்பது குறித்து கிராம குடிநீர் மற்றும் சுகாதார மேலாண்மை உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

# வெள்ளகோவில் நூல் மில்லில் தீ விபத்து



வெள்ளகோவில், ஆக. 3

வெள்ளகோவில் அருகே உள்ள அனுமந்தபுரத்தில் முருகப்பன் (30) என்பவருக்கு சொந்தமான நூல் மில் உள்ளது. நேற்று மாலை பஞ்சில் திடீரென தீப்பிடித்து எரிய தொடங்கியது. இதை அறிந்த ஊழியர்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்தனர், தகவலின் பேரில் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதில் மில்லின் மேற்கூறை முற்றிலுமாக எரிந்தது. மேலும் எந்திரங்கள் மற்றும் பஞ்சு, எரிந்து நாசமாயிற்று. இந்த தீ விபத்து க்கு மின்கசிவு காரணமாக இருக்கலாமா என்று போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அவினாசி நகருக்குள் வராமல் செல்லும் பஸ்கள்: பயணிகள் கடும் அவதி




அவினாசி, ஆக.3

அவினாசி நகரம் திருப்பூர் மற்றும் கோவை மெயின் ரோட்டில் அமைந்துள்ளது.

அவினாசியில் இருந்து கோவைக்கு பல்வேறு அலுவல்களுக்காகவும், மாணவ, மாணவியர் உள்ளிட்ட 500க்கும்மேற்பட்ட பொதுமக்கள் பஸ்சில் தினமும் போய் வருகின்றனர்.

இந்த நிலையில் பயணிகள் திருப்பூரிலிருந்து அவினாசி, தெக்கலூர் ஆகிய ஊர்களுக்கு செல்ல பஸ்சில் ஏறினால் அவினாசியில் நிற்காது என்று நடத்துனர்கள் பயணிகளை வலுக்கட்டாயமாக பஸ்சிலிருந்து இறக்கிவிடுகின்றனர்.

அதே போல் கோவையிலிருந்து திருப்பூர், ஈரோடு செல்லும் ஒரு சில பஸ்களை தவிர தனியார் உள்ளிட்ட மற்ற அனைத்து பஸ்களும் அவினாசிக்குள் வராமல் புறவழிச்சாலையில் சென்று வருகின்றனர். இதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டு கோவையில் மருத்துவமனைகளுக்கு சென்று வரும் முதியவர்கள், பெண்கள்உள்ளிட்ட பயணிகள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். எனவே கட்டாயம்அனைத்து பஸ்களும் அவினாசி வழியாக வந்து பயணிகளைஏற்றிச்செல்ல நடவடிக்கைஎடுக்கவேண்டும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ரூ.53 லட்சத்துக்கு தேங்காய் பருப்பு விற்பனை



வெள்ளகோவில், ஆக. 3

வாரம் தோறும் செவ்வாயன்று தேங்காய் பருப்பு வியாழனன்று சூரியகாந்தி விதை ஏலம் நடைபெற்று வருகிறது. வெள்ளகோவில், காங்கேயம், முத்தூர், ஊத்துக்குளி பகுதியைச் சேர்ந்த 13 வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

வெள்ளகோவில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் வாரம் தோறும் செவ்வாயன்று தேங்காய் பருப்பு வியாழனன்று சூரியகாந்தி விதை ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு வாணியம்பாடி, மூலனூர், கரூர், ஸ்ரீரங்கம், திருச்சி பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு தேங்காய் பருப்பு மற்றும் சூரியகாந்தி விதை விற்பனைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து செல்வார்கள். நேற்று செவ்வாய்கிழமை 146 விவசாயிகள் கலந்து கொண்டு ரூ. 70 ஆயிரத்து 576 கிலோ தேங்காய் பருப்பு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், வெள்ளகோவில், காங்கேயம், முத்தூர், ஊத்துக்குளி பகுதியைச் சேர்ந்த 13 வியாபாரிகள் கலந்து கொண்டு ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக ரூ. 84.79 க்கும், குறைந்தபட்சம் ரூ.60.30க்கும் கொள்முதல் செய்தனர், நேற்று மொத்த ரூ. 53லட்சத்து 36ஆயிரத்து 987க்கு வணிகம் நடைபெற்றது. இத்தகவலை வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சி. மகுடேஸ்வரன் தெரிவித்தார்.


# லிங்கேஸ்வரர் ராஜகோபுரத்துக்கு பாலாலயம்



அவினாசி, ஆக.3

அவினாசியில் கொங்கு லிங்கேஸ்வரர் கோவில். ஏழு சிவாலயங்களில் முதன்மை பெற்றது. இங்கு ஸ்ரீ கருணாம்பிகை உடனமர் அவினாசி லிங்கேசஸ்வரர் அமைந்துள்ளார். இக்கோவில் கும்பாபிஷேகம் நடத்துவதற்காக திருப்பணி நடைபெற்று வருகிறது. அதற்காககடந்த மாதம்23ம்தேதிகோவிலில் உள்ள பரிவார சன்னதி விமானங்களுக்கு ஹோமம் நடத்தி பாலாலயம் செய்யப்பட்டது. இதன் அடுத்த கட்டமாக அவினாசிலிங்கேஸ்வரர் ஏழுநிலை ராஜகோபுரம் விமானத்திற்கு பாலாலயம் செய்ய உள்ளதாக கோவில் அறங்காவலர் குழு தலைவர் சக்திவேல் மற்றும் அறங்காவலர்கள் தெரிவித்தனர். அதன்படி நாளை 4ந்தேதி காலை 9 மணியளவில் சிறப்பு வழிபாடு, ஹோமம் மற்றும் பாலாலயம் நடைபெற உள்ளது.

# மகளிர் உரிமைத் தொகை திட்டம்: சென்னையில் குடும்ப தலைவிகள் விவரம் சரி பார்க்கும் பணி 6ந்தேதி தொடக்கம்




சென்னை, ஆக. 3

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000 வழங்குவதற்கான விண்ணப்பம் வினியோகிக்கப்பட்டு பதிவு செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. சென்னையில் 17 லட்சம் குடும்ப அட்டைகள் இருப்பதால் 2 கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 24ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. சிறப்பு முகாம்களில் விண்ணப்ப படிவ விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. 1,727 சிறப்பு முகாம்களில் 4ந்தேதி வரை இப்பணி நடக்கிறது.

இதுவரையில் 6 லட்சத்து 18 ஆயிரம் விண்ணப்பங்கள் முதல் கட்டமாகவும், 53,568 படிவங்கள் 2வது கட்டமாகவும் வழங்கப்பட்டன. நேற்று வரை 4 லட்சத்து 33 ஆயிரத்து 326 பேர் பதிவு செய்துள்ளனர். முதல் கட்ட விண்ணப்ப பதிவு நாளை மறுநாளுடன் முடிவடைகிறது. முதற்கட்டம் முடிவடைகிற நிலையில் 2வது கட்ட விண்ணப்ப படிவம் வழங்கும் பணி ஒரு சில இடங்களில் தொடங்கியுள்ளது. 102 வார்டுகளுக்கு உட்பட்ட 724 ரேஷன் கடைகள் பகுதியில் 5ந்தேதி முதல் 16 ந்தேதி வரைசிறப்பு முகாம் கள் நடைபெற உள்ளன. இதற்கிடையில் விண்ணப்பங்களை பதிவு செய்த குடும்பத் தலைவிகளின் விவரங்கள் சரி பார்க்கும் பணியும் விரைவில் தொடங்க உள்ளது. படிவத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ள விவரங்கள் சரி தானா? திட்டத்தின் நிபந்தனைகள் பின்பற்றப்படுகிறதா? ஏற்கனவே உதவி தொகை ஏதேனும் வாங்குகிறார்களா? ஏற்கனவே பெறும் உதவித் தொகையை மறைத்து மகளிர் உரிமைத் தொகை பெற விண்ணப்பித்து உள்ளார்களா? என்பதை ஆய்வு செய்கிறார்கள்.

குடும்பத்தில் உள்ளவர்கள் எத்தனை பேர், ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் ஒரே குடும்பத்தில் விண்ணப்பித்து இருக்கிறார்களா? என்பது போன்றவற்றை சரி பார்க்கிறார்கள். இந்த பணி வருகிற 6ந்தேதி முதல் 15ந்தேதி வரை வீடு வீடாக நடக்கிறது. இந்த பணியில் 1000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபடுகிறார்கள். 100 சதவீதம் கள ஆய்வு நடத்திய பிறகுதான் குடும்ப தலைவிகளுக்கு ரூ.1000 உதவித் தொகை மாதந்தோறும் வங்கி கணக்கில் வழங்கப்படும். 2வது கட்ட சிறப்பு முகாம்கள் முடிந்தவுடன் 16ந்தேதி முதல் 25ந்தேதி வரை சரி பார்க்கும் பணி தொடங்குகிறது. தகுதியானவர்கள் யாரும் விடுபட்டு விடாமலும் குடும்ப தலைவிகள் தவறான தகவல்களை கொடுத்து உதவியை பெறுவதை தடுக்கவும் சான்றிதழ் சரிபார்ப்பு தீவிரமாக நடைபெற உள்ளது. முகாம் தொடங்கி 9 நாட்கள் முடிந்துள்ள நிலையில் 51 சதவீதம் பேர் மட்டுமே விண்ணப்ப பதிவு செய்து உள்ளனர்.

8 லட்சத்து 47 ஆயிரத்து 654 பேருக்கு விண்ணப்பங்கள் வழங்கி பதிவு செய்ய வேண்டும் என்ற இலக்கை மாநகராட்சி முன்நிறுத்தி செயல்பட்ட நிலையில் 4 லட்சத்து 33 ஆயிரம் பெண்கள் மட்டுமே இதுவரையில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# மெரினா கடற்கரை குதிரைகளுக்கு லைசென்ஸ் தமிழக கால்நடை நலவாரியம் முடிவு



2 ஆகஸ்ட் 2023 2:46 PM

மெரினா கடற்கரையில் குதிரைகளை சவாரிக்கு பயன்படுத்துவோர் உரிமம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஆரோக்கியமாக பராமரிக்கப்படவேண்டும் என்பதற்காகவே அவற்றுக்கு லைசென்ஸ் வழங்க பரிந்துரைத்துள்ளோம் என்றார். மேலும் படிக்க சென்னை: சென்னை மெரினா கடற்கரையில் குதிரை சவாரி பிரபலம். சவாரி தொழிலில் ஏராளமான குதிரைகள் இருக்கின்றன.

இது தவிர குதிரை வண்டிகளும் ஆங்காங்கே உள்ளன.

இந்த வண்டிகளிலும் பலர்சவாரி செல்வது வழக்கம். மேலும் பந்தயத்துக்காகவும் சில குதிரைகளை வளர்க்கின்றனர்.

இதனிடையே சில இடங்களில் குதிரை உள்ளிட்ட வளர்ப்புபிராணிகள் துன்புறுத்தப்படுவதாக கால்நடை நலவாரியத்துக்கு புகார்கள் வந்தன. மேலும் சில குதிரைகள் போதிய பராமரிப்பு இல்லாமல் இறப்பதாகவும் தெரியவந்தது. இதை தடுக்க தமிழ்நாடு கால்நடை நலவாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக குதிரைகளுக்கு மாநகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து உரிமம் வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

குறிப்பாக சென்னை மெரினா கடற்கரையில் குதிரைகளை சவாரிக்கு பயன்படுத்துவோர் உரிமம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு கால்நடை நல வாரிய உறுப்பினர் சுருதி வினோத்ராஜ் கூறுகையில், சென்னை மெரினா கடற்கரை பகுதியில் மட்டும் சவாரி உள்ளிட்ட வணிக ரீதியாக 150க்கும் மேற்பட்ட குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அவற்றை அதன் உரிமையாளர்கள்சரியாக பராமரிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. அவை ஆரோக்கியமாக பராமரிக்கப்படவேண்டும் என்பதற்காகவே அவற்றுக்கு லைசென்ஸ் வழங்க பரிந்துரைத்துள்ளோம் என்றார்.

இதற்கிடையே குதிரைகளுக்காக பிரத்யேகமாக சென்னை திருவல்லிக்கேணியில் புகலிடம் அமைக்க சென்னை கலெக்டரிடம் விலங்குகள் உரிமை அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபற்றி அந்த அமைப்பை சேர்ந்த ஷிரானி பெரேரோ கூறுகையில், நாங்கள் பல ஆண்டுகளாக மெரினா கடற்கரை குதிரைகள் நலனுக்காக உழைத்து வருகிறோம். அவற்றுக்கு சரியான உணவு, பராமரிப்பு கிடைக்க ஏற்பாடு செய்கிறோம். இந்த குதிரைகள் வெயில் மற்றும் மழையால் அவதிப்படுகின்றன. எனவே அவற்றை பாதுகாக்க ஒரே இடத்தில் 200 குதிரைகள் கட்டும் அளவுக்கு புகலிடம் அமைக்க கேட்டுள்ளோம். அதற்கான இடவசதி திருவல்லிக்கேணியில் உள்ளது என்றார்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருப்போரூரில் கிராமம் கிராமமாக கொடியேற்றி மக்களை சந்திக்கிறார்



திருப்போரூர், ஆக. 3

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் இன்று கிராமம் கிராமமாக சென்று தி.மு.க. கொடியேற்றி மக்களைசந்திக்கிறார். மேலும் 63 புதிய குடியிருப்புகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து 500 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகையை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்ற தொகுதியில் அடங்கிய திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் இன்று (புதன்கிழமை) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கிராமம் கிராமமாக சென்று கழக கொடியேற்றி மக்களை சந்திக்கிறார்.

திருப்போரூர் தெற்கு ஒன்றியம் மானாம்பதி கிராமத்தில் இன்று கொடியேற்று விழா நிகழ்ச்சியை தொடங்கி கழக கொடியேற்றுகிறார். குயில் குப்பத்தில் கொடியேற்றுகிறார். திருப்போரூர் பேரூர் அரசு மருத்துவமனை எதிரில் இருந்து கொடியேற்றி அதை தொடர்ந்து இள்ளலூரிலும், வெண்பேடு கிராமத்திலும், காயாரிலும், காரியார் காலனியிலும், மாலை 5 மணிக்கு பனங்காட்டுப்பாக்கத்திலும், 5.30 மணிக்கு கொளத்தூரிலும், 6 மணிக்கு சோலையூரிலும், 6.30 மணிக்கு கேளம்பாக்கத்திலும், இரவு 7 மணிக்கு தையூரிலும் கொடியேற்றி வைக்கிறார். மொத்தம் 13 இடங்களில் கிராமம் கிராமமாக சென்று கொடியேற்று விழா நிகழ்ச்சியில் பங்கேற்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வழிநெடுங்கிலும் உள்ள கிராமங்களில் மக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதல் முறையாக கிராமம் கிராமமாக சென்று கொடியேற்று விழாவில் பங்கேற்க வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு திருப்போரூர் வடக்கு, தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூரில் உள்ள ஒட்டு மொத்த கழக நிர்வாகிகளும் வழிநெடுக கழக கொடி தோரணங்களை அழகுற கட்டி வரவேற்பு பதாகைகளையும் கழக கொடிகளையும் தங்களது கரங்களில் ஏந்தி நின்று எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறி உள்ளார். முன்னதாக இருளர் இன மக்களுக்கு 63 புதிய குடியிருப்புகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து 500 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தருமபுரி, ஆக.3

தருமபுரி உதவி கலெக்டர் கீதாராணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: தருமபுரி வருவாய் கோட்டத்திற்குட்பட்ட தர்மபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பென்னாகரம், காரிமங்கலம் ஆகிய தாலுகாக்களைச் சேர்ந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி இந்த மாதத்திற்கான கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தர்மபுரி உதவி கலெக்டர் அலுவலகத்தில் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) பகல் 11 மணிக்கு நடக்கிறது. இந்த கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொள்கிறார்கள்.

எனவே விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகள் கோரிக்கைகளை தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சாத்தான்குளம் பேரூராட்சி பகுதியில் சிறுவர் பூங்கா ஊர்வசி அமிர்தராஜ் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்

சாத்தான்குளம், ஆக. 3

சாத்தான்குளம் பேரூராட்சி 9வது வார்டில் ரூ. 10 லட்சம் மதிப்பில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் ஸ்டெல்லாபாய் தலைமை தாங்கினார்.

சாத்தான்குளம் தாசில்தார் ரதிகலா முன்னிலை வகித்தார். இதில் ஊர்வசி அமிர்தராஜ் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பூங்காவை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.



விழாவில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஜோசப், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் வேணுகோபால், தூத்துக்குடி தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி துணை தலைவர் சங்கர், ஒன்றிய கவுன்சிலர்கள் குருசாமி, பிச்சிவிளை சுதாகர், பேரூராட்சி துணைத்தலைவர் மாரியம்மாள், பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜோசப், அலெக்ஸ், சுந்தர், வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் சக்திவேல்முருகன், பார்த்தசாரதி, நகர மகிளா காங்கிரஸ் தலைவர் ராணி, மாவட்ட மகிளா காங்கிரஸ் செயலாளர் வசுமதி, முன்னாள்மாவட்டமகிளா காங்கிரஸ் தலைவர் ஜாக்குலின், தி.மு.க. நகரசெயலாளர் மகாஇளங்கோ, அழகம்மன் கோவில் அறங்காவல் குழுத்தலைவர் சரவணன், வட்டார காங்கிரஸ் தலைவர்கள் ரமேஷ் பாபு (பேய்குளம்), கோதண்டராமன் (ஆழ்வார்), ஸ்ரீவைகுண்டம் தொகுதி இளைஞர் காங்கிரஸ் துணை தலைவர் பாஸ்கர், தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் இசை சங்கர், முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர் சீலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மாநில அளவிலான கபடி போட்டி



அணைக்கட்டு, ஆக. 3

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் அடுத்த பனந்தோப்பு கிராமத்தில் மாநில அளவிலான கபடி போட்டி கடந்த 2 நாட்களாக நடந்தது. ஹிட்லர் பாய்ஸ் அணியினர் நடத்திய இந்த போட்டியில் சென்னை, திண்டுக்கல், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 67அணிகள் பங்கேற்றது. சுமார் 750க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்று ஆர்வத்துடன் விளையாடினர். இதில் பெரிய ஏரியூர் கிராமத்தை சேர்ந்த ஜெய் அனுமான் அணியினர் சிறப்பாக விளையாடிய முதல் பரிசை தட்டிச் சென்றனர். முதல் பரிசாக 10அடி உயர கோப்பையுடன் ரூ.7 ஆயிரம், 2ம் பரிசாக 7 அடி கோப்பையுடன் ரூ.5 ஆயிரம் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டது.

# ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கோவிலுக்கு சொந்தமான ரூ.10 கோடி மதிப்புள்ள நிலம் மீட்பு

பூந்தமல்லி, ஆக. 3

பூந்தமல்லியில் உள்ள திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜ பெருமாள் கோவிலுக்கு சொந்தமான நிலம் பூந்தமல்லி பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளது.

இந்த நிலத்தை சிலர் பல ஆண்டுகளாக ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டி பயன்படுத்தி வந்தனர். இடத்தை காலி செய்ய நோட்டீஸ் வழங்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் இடத்தை காலி செய்யாமல் இருந்தனர். இதைத் தொடர்ந்து இன்றுகாலை திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜப் பெருமாள் கோவில் அதிகாரிகள் மேற்பார்வையில் கோவில் ஊழியர்கள், வருவாய் துறையினர் அங்கிருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி கட்டிடங்களுக்கு சீல் வைத்தனர். மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. மீட்கப்பட்ட கோவில் நிலத்தின் மதிப்பு ரூ.10 கோடி என்று கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கோத்தகிரி ரோட்டில் குவிந்து கிடக்கும் காய்கறி கழிவுகளால் துர்நாற்றம்

கோத்தகிரி, ஆக. 3

கோத்தகிரி வட்டாட்சியர்அலுவலகத்தில்இருந்து ராம்சந்த் செல்லும் ரோட்டில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன. பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் உள்பட பலர் நடந்து செல்கின்றனர். இந்த நிலையில் அங்கு கடை வைத்திருக்கும் ஒரு சிலர் சாலையின் ஒரு பகுதியில் காய்கறி கழிவுகளை கொட்டி வருகின்றனர். இதனால் அந்த பகுதி முழுவதும் குப்பைகள் குளம்



போல் தேங்கி கிடக்கின்றன. அவற்றில் இருந்து துர்நாற்றமும் வீசுகிறது. சாலையோர காய்கறி கழிவுகளை கால்நடைகள் மேய்வதால், சாலை முழுவதும் கழிவுகள் பரவி கிடக்கின்றன. இதனால் அப்பகுதியில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

எனவே கோத்தகிரி பேரூராட்சி அதிகாரிகள் இந்த பகுதியில் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு தாசில்தார் ரோட்டில் குப்பை தொட்டி வைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# செங்கோட்டையில் நெய் அருவி செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை: மலைப்பாதை அடைக்கப்பட்டது

செங்கோட்டை, ஆக. 3

செங்கோட்டையில் இருந்து சுமார் 4 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் குண்டாறு அணைக்கட்டு உள்ளது. இந்த அணையில் இருந்து மலையில் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்றால் நெய்யருவி உள்ளது. குற்றாலத்தில் குளிப்பதற்கு கூட்டம் அதிகமாக இருக்கும்போது, சுற்றுலா பயணிகள் இந்த நெய் அருவிக்கு படையெடுப்பார்கள். இந்த அருவியை சுற்றி ஏராளமான தனியார் அருவிகள் உள்ளன. இந்த அருவிகளுக்கு செல்வதற்கான சாலை மிகவும் கரடு முர



டாக, குண்டும்,குழியுமாக இருப்பதால் சொகுசு கார்கள், ஆட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல முடியாது. எனவே ஜீப் மூலம் தான் செல்ல முடியும். தற்போது நெய் அருவிக்கு அதிகளவில் சுற்றுலா பயணிகள் வர தொடங்கி உள்ளனர். இதனால் குண்டாறு அணையில் ஏராளமான ஜீப்கள் குவிந்துள்ளது. இந்த ஜீப்களில் அருவிக்கு செல்லும் போது குறுக்கிடும் ஓடையை கடக்கும் போது எதிர்பாரா வண்ணம் பேராபத்து நடக்க வாய்ப்புகள் அதிகம் என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஜீப்களின் உறுதி தன்மையை ஆய்வு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தனர்.

அதன் அடிப்படையில் ஆர்.டி.ஓ. லாவண்யா தலைமையில் தாசில்தார் முருக செல்வி முன்னிலையில் அதிகாரிகள் நெய் அருவி செல்லும் மலைப் பாதையில் ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து அருவிக்கு செல்ல தடை விதித்து மலை பாதை கேட்டை பூட்டினர்.

# ஆடிப்பெருக்கை முன்னிட்டு இன்று வைகை பெருவிழா

மதுரை, ஆக. 3

மதுரையை தலைமையிடமாக கொண்டு வைகை நதி மக்கள் இயக்கம் இயங்கி வருகிறது. இந்த இயக்கம் கடந்த 8 ஆண்டுகளாக தூய்மையான வைகை என்ற இலக்கை நோக்கியும், நீர் நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் தூய்மையை பராமரிக்கவும் பல்வேறு பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக வைகை பெருவிழா நான் காம் ஆண்டு நிகழ்ச்சி இன்று (3 ந்தேதி, வியாழக் கிழமை) நடைபெறுகிறது. ஆடிப் பெருக்கை ஆற்றில் கொண்டாடுவோம் என்ற தலைப்பில் வைகை ஆற்றில் சித்திரைதிருவிழாவின் போது, கள்ளழகர் இறங்கும் ஆற்றங்கரையில் மாலை 4.30 மணிக்கு தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற இருக்கிறது. நிகழ்ச்சிக்கு வைகை நதி மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் வைகை எம். ராஜன் தலைமை தாங்குகிறார். மேயர் இந்திராணி குத்து – விளக்கேற்றி தொடங்கி வைக்கிறார். இதில் தமிழ் நாடு சேவாபாரதி ராதா, சின்மயா மிஷன் திலகர், புதூர் பூமிநாதன் எம்.எல்.ஏ., கிழக்கு மண்டல தலைவர் முகேஷ் சர்மா, மேற்கு மண்டல தலைவர் வாசுகி, தென்னிந்திய பார்வர்டு பிளாக்



தலவர் திருமாறன் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள். இதுபற்றி வைகை நதி மக்கள் இயக்க தலைமை ஒருங்கிணைப்பாளர் வைகை எம்.ராஜன் கூறுகையில், ஆடிப்பட்டம் தேடி விதை என்பது பழமொழி. நமது வாழ்வாதாரமான ஆறுகளை ஆடி மாதத்தில் போற்றி வணங்கக்கூடிய மரபு பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. மக்களுக்கு அதனை உணர்த்தும் விதமாக வைகை ஆற்றங்கரையில் பாரம்பரிய விளையாட்டுகள் விளையாடி, வைகை ஆற்றுடன் உணர்வுப்பூர்வமாக உறவை ஏற்படுத்திக்கொள்ள நல் வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது. நதி பாதுகாப்பின் அவசியம் குறித்த சொற்பொழிவு, நாட்டிய அஞ்சலி மற்றும் வைகை நதி தீபாராதனை, வைகை நதியை பாதுகாப் போம் என்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்வோடு விழா நிறைவு பெறுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# குமரி மாவட்ட மட்டி வாழைப்பழம் புவிசார் குறியீடு வழங்கியதால் மக்கள் மகிழ்ச்சி

கன்னியாகுமரி, ஆக. 3

இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் தனித்துவமாக உற்பத்தியாகும் பொருள்களுக்கு இந்திய அரசாங்கம் புவிசார் குறியீடு வழங்கி அங்கீகரிக்கிறது. அந்த வகையில் தற்போது மட்டி வாழைப்பழத்திற்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் விளையும் மட்டி வாழைப்பழங்களில் பெரும்பாலான வகைகள் குமரி மாவட்டத்தில் விளைவிக்கப்படுகிறது. குமரி மாவட்டத்தில் மட்டி, செம்மட்டி ஆகிய 2 ரகங்கள் உள்ளன. இந்த இரண்டு ரகங்களுமே மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விளை விக்கப்பட்டு வருகின்றன. குமரி மாவட்ட மண், மட்டிப்பழத்திற்கு ஏதுவானதாக இருப்பதால் விளைச்சலும் அதிகமாக உள்ளது. மட்டி வாழை மரங்கள் 8 முதல் 10 அடி உயரம் வரை வளரக்கூடியவை. மட்டி வாழையை நட்ட ஒரு ஆண்டிற்குள்ளாகவே வாழைத்தார்களை அறுவடை செய்ய முடியும். ஒவ்வொரு தாரிலும் 10 முதல் 12 சீப்புகள் இருக்



கும். தாரில் 120 முதல் 150 பழங்கள் வரை இருக்கும். இந்த மட்டி வாழைப் பழத்திற்கு ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளன. மட்டி வாழைப்பழத்தில் பொட்டாசியம் சத்து அதிகமாக இருப்பதால் உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுத்து இதயத்தையும், ரத்த அழுத்தத்தையும்சீராக பராமரிக்க உதவுகிறது. மேலும் இதில் புரதம் மற்றும் உப்பு சத்து இருக்கிறது. இதனால் சிறுநீரக பிரச்சினைகளை தீர்க்கும் வல்லமையும் மட்டிப் பழத்திற்கு உள்ளது. இந்த வாழைப்பழம் செரிமானத்துக்கு ஏற்றது மட்டுமின்றி, இரைப்பை மற்றும் குடல் பிரச்சினைகளை சமாளிக்க உதவுகிறது. நாள்பட்ட அல்சர் பிரச்சினை உள்ளவர்கள் இந்த பழத்தை சாப்பிடுவதன் மூலம், அதிலிருந்து விடுபட முடியும். நோய் எதிர்ப்பு சக்தி கொண்டமட்டிப்பழத்தை, பச்சிளம் குழந்தைகள் முதல் நோயாளிகள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுகிறார்கள். இந்த பழம் மிகவும் மிருதுவாகவும், இனிப்பாகவும், மணமாகவும் இருப்பதால் குமரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் குழந்தைகளுக்கு விரும்பி கொடுப்பார்கள். குழந்தைகளுக்கு முதன்முதலாக மட்டி வாழைப்பழத்தை நசுக்கி சாப்பிட கொடுக்கும் பழக்கம் குமரி மாவட்டத்தில் இன்றளவும் இருந்து வருகிறது. மட்டி வாழைப்பழத்திற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது மட்டிப்பழத்திற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் குமரி மாவட்டத்திற்கும், வாழை விவசாயிகளுக்கும் அந்தஸ்து கிடைத்துள்ளது. குமரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் நேந்திரம் வாழை, நாட்டு மருந்து, கிராம்பு, ஈத்தாமொழி நெட்டை தென்னை தேங்காய், மார்த்தாண்டம் தேன் உள்ளிட்டவைகளுக்கு ஏற்கனவே புவிசார் குறியீடு வழங்கபபட்டுள்ள நிலையில், தற்போது மட்டி வாழைப்பழத்திற்கு வழங்கப்பட்டிருப்பதால் குமரி மாவட்ட வாழை விவசாயிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மட்டி வாழைப்பழத்திற்கு புவிசார் குறியீடு கிடைத்திருப்பதால் அதன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

திருப்பூர், ஆக. 3

திருப்பூர்மாநகர் அதிமுக சார்பில் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கே என் விஜயகுமார் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்எல்ஏ கலந்துகொண்டு மதுரையில் நடைபெறும் அதிமுக பொன்விழா



எழுச்சி மாநாட்டிற்கு சுவர் விளம்பரம் எழுதுவது, வாகன வசதி ஏற்பாடு, மற்றும் திரளானோர் பங்கேற்பது குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். கூட்டத்தின் போது திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் படிவங்களை மணலூர்மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏவிடம் வழங்கப்பட்டது. கூட்டத்தில் பகுதி செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# திண்டுக்கல் அருகே ரூ.10 லட்சம் மதிப்பிலான வைர கற்களை பறித்த கும்பல் கைது

திண்டுக்கல், ஆக.3

மதுரை விரகனூர் மகாராஜா நகரைச் சேர்ந்தவர் அழகர் (42). இவர் சிவகங்கை மாவட்டம் தத்தனேந்தல் அரசு உயர்நிலைப்பள்ளியில்இளநிலை உதவியாளராகபணிபுரிந்து வருகிறார். இவர் தன்னிடம் இருந்த நகைகளை விற்று விட்டு ரூ.10 லட்சம் மதிப்பிலான வைர கற்கள் வாங்கினார். தற்போது அதனை விற்க முடிவு செய்தார்.

இதற்காக மதுரை தெப்பக்குளம் அடைக்கலம் பிள்ளைதெருவைச்சேர்ந்த ராமகிருஷ்ணன் (33), பரமக்குடி முத்தாலம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த அழகர் மணிகண்டன் (30) ஆகியோரை அணுகினார்.

அவர்கள் கோவையில் வைரகற்கள்வியாபாரி உள்ளதாகவும் அவர்களிடம் விற்றுத் தருவதாகவும் கூறினார். அதன்படி அழகர், அழகர் மணிகண்டன், மதுரை ஜே.கே.நகரைச் சேர்ந்த கண்ணன், ராமகிருஷ்ணன் ஆகியோர் கோவை நோக்கி சென்றனர்.

அழகர் 2 வைர கற்களையும் ஒரு பர்சில் வைத்திருந்தார். திண்டுக்கல் பாலம் ராஜக்காபட்டி அருகே வந்த போது அழகர் மணிகண்டன் தனக்கு களைப்பாக இருப்பதாக கூறி காரை நிறுத்தினார். அப்போது முன்னால் சென்று கொண்டு இருந்த காரில் இருந்து 4 பேர் திடீரென இறங்கி வந்து ராமகிருஷ்ணன், அழகர், மணிகண்டனை அடித்து தாக்கி கத்தி முனையில் அவர்களிடம் இருந்த வைர கற்களை பறித்துச் சென்றனர்.

காயமடைந்த அழகர் இது குறித்து தாடிக்கொம்பு போலீஸ் நிலையத்துக்கு புகார் அளிக்க வந்தார். அப்போது அவருடன்வந்த ராமகிருஷ்ணன், அழகர் மணிகண்டன் ஆகியோர் தப்பிச் சென்றனர். போலீசார் விசாரணை நடத்தியதில் ராமகிருஷ்ணன், அழகர் மணிகண்டன், பரமக்குடியைச் சேர்ந்த தினேஷ் பாண்டி ஆகியோர்தான் வைர கற்களை திருடிச் சென்றது தெரிய வந்தது.

அவர்களை கைது செய்த போலீசார் தப்பி ஓடிய 4 பேர்களை பிடிக்க பரமக்குடிக்கு விரைந்துள்ளனர்.

# மல்லிகை பூக்கள் ரூ.700க்கு விற்பனை

மதுரை, ஆக. 3

மதுரை ஆடி 18ஐ யொட்டி மதுரையில் மல்லிகை பூக்கள் 700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டனபிச்சி,முல்லை மலர்களும் விலை அதிகரித்துள்ளது. ஆடி மாதத்தின் முக்கிய தினமாக ஆடி 18ஐ யொட்டி மதுரையில் உள்ள பூ மார்க்கெட்டுகளில் பூக்களின் விலை மேலும் அதிகரித்துள்ளது. மதுரை மாட்டுத்தாவணியில் உள்ள மலர் வணிக வளாகத்தில் மல்லிகை, பிச்சி, முல்லை உள்ளிட்ட அனைத்து மலர்களும் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன. இன்று பூக்களை வாங்க பொது மக்கள் அதிகளவில் திரண்டனர். மல்லிகை பூக்கள் நேற்றை விட ரூ.200 விலை உயர்ந்து இன்று கிலோ 700 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டது. நேற்று 400 ரூபாய் வரை விற்கப்பட்ட பிச்சி, முல்லை மலர்களும் இன்று 700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன. இது தவிர சம்மங்கி



300 ரூபாய்க்கும், பட்டன் ரோஸ், செவ்வந்தி 250 ரூபாய்க்கும், செண்டு மல்லி 120 ரூபாய்க்கும், அரளி 250 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டன. தற்போது ஆடி மாதம் என்பதால் ஓரளவுக்கு விலை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் வருகிற ஆவணிமாதத்தில்விசேஷ நாட்கள் அதிகமாக இருக்கும் என்பதால் பூக்களின் தேவை யும் அதிகமாக இருக்கும். அப்போது பூக்களின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தந்தையின் மோட்டார்சைக்கிளை ஓட்டிய பள்ளி மாணவன் பலி

பள்ளிப்பாளையம், ஆக. 3

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் அலமேட்டை சேர்ந்தவர் சந்தோஷ். இம்மாணவன் திருச்செங்கோட்டில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் பள்ளிக்கு செல்லாமல் தனது தந்தையின் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சந்தோஷ் தனது நண்பனை பார்ப்பதற்காக வெப்படைக்கு சென்றார். பின்னர் அங்கிருந்து சந்தோஷ் மோட்டார்சைக்கிளில் வீட்டுக்கு திரும்பினார்.

அப்போது வெப்படை தெற்கு பாளையம் சாலையில் சந்தோஷ் மோட்டார் சைக்கிளில் வந்தபோது பின்னால் நந்தகுமார் என்பவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை கவனிக்காமல் திரும்பினார். அப்போது மோட்டார் சைக்கிள் மீது நந்தகுமார் என்பவரின் இருசக்கர வாகனம் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட சந்தோஷ் சாலையில் உள்ள தடுப்பு சுவரில் தலை மோதி படுகாயம் அடைந்தார்.

அக்கம் பக்கத்தினர் மீட்டு சந்தோஷை பள்ளிப்பாளையம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சந்தோஷ் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். விசாரணை இந்த விபத்து சம்பவம் குறித்து பள்ளிப்பாளையம் போலீசார் வழக்கு ப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பள்ளி மாணவன் சந்தோஷ், மோட்டார்சைக்கிள் ஓட்டி விபத்துக்குள்ளான வீடியோ காட்சி தற்போது வெளியாகி உள்ளது.

இந்த வீடியோ காட்சி பதை பதைக்க வைக்கும் வகையில் உள்ளது.

## துருவ் விக்ரம் படத்தை தொடங்கும் மாரி செல்வராஜ்.. எப்போது தெரியுமா?



கதிர், கயல் ஆனந்தி, யோகிபாபு நடிப்பில் வெளியான பரியேறும் பெருமாள் படத்தின் மூலம் தமிழ்திரையுலகிற்குஅறிமுக மானவர் இயக்குனர் மாரி செல்வராஜ். இப்படத்தை தொடர்ந்து தனுஷ் நடிப்பில் உருவாகியிருந்த கர்ணன் திரைப்படத்தை இயக்கி யிருந்தார். அதன்பின்னர், நடிகர் விக்ரமின் மகன் துருவ் விக்ரம் நடிப்பில் கபடி விளையாட்டை மையமாக வைத்து புதிய படம் ஒன்றை இயக்கினார். இப்படத்தை பரியேறும் பெருமாள், இரண்டாம் உலகப் போரின் கடைசி குண்டு, ரைட்டர் போன்ற பல படங்களை தயாரித்த இயக்குனர் பா.இரஞ்சித் நீலம் புரொடக்ஷன் தயாரிக்கிறது. இந்த படத்திற்காக நடிகர் துருவ் விக்ரம் கபடி விளையாட்டு பயிற்சியும் பெற்று வந்தார். ஆனால், திடீரென்று இயக்குனர் மாரிசெல்வராஜ் இந்த படத்தை தள்ளி வைத்துவிட்டு உதயநிதி ஸ்டாலின், வடிவேலு நடிப்பில் வெளியான 'மாமன்னன்' திரைப்படத்தை தொடங்கினார். இந்நிலையில், தற்போது மீண்டும் இந்த படத்தின் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறார் மாரி செல்வராஜ். இப்படத்தின் படப்பிடிப்பு வருகிற செப்டம்பர் மாதம் தொடங்கவுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இதன் படப்பிடிப்பு நெல்லை, தூத்துக்குடி பகுதியில் நடைபெறவுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது. 1990காலக்கட்டத்தில் உருவாகும் இப்படம் கபடி வீரர் மணத்தி கணே சனின் வாழ்க்கை வரலாறை மையமாக வைத்து உருவாகவுள்ளதாக கூறப்படுகிறது.

## 93 வயதில் வில்லன் கதாபாத்திரத்தில் கலக்கும் சாருஹாசன்



'தாதா 87' மற்றும் 'பவுடர்' படங்களை இயக்கிய விஜய் ஸ்ரீஜி இயக்கத்தில் உருவாகி வரும் படம் 'ஹரா'. இப்படத்தின் மூலம் நீண்ட இடைவெளிக்கு பிறகு நடிகர் மோகன் மீண்டும் நடிக்கிறார். மேலும் இப்படத்தில் குஷ்பு, யோகி பாபு, மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி, தீபா, மைம் கோபி, சாம்ஸ், கௌஷிக், அனித்ரா நாயர், சந்தோஷ் பிரபாகர் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். 'ஹரா' படத்தில் எதிர்மறை கதாபாத்திரத்தில் சுரேஷ் மேனன் நடிக்கிறார். மேலும், அரசியல்வாதியாக வனிதா விஜயகுமார் நடிக்கிறார். கோயம்புத்தூர் எஸ்.பி.மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெய ஸ்ரீ விஜய் இணைந்து இப்படத்தை தயாரிக்கின்றனர். இப்படத்தின் பணிகள் முழுவீச்சில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், 'ஹரா' படத்தில் சமூக பொறுப்பு மிக்க டானாக சாருஹாசன் நடிக்கிறார். 93 வயதாகும் சாருஹாசன் சிறிதும் தொய்வில்லாமல் தனது காட்சிகளை சிறப்பாக நடித்து கொடுத்துள்ளதாக இயக்குனர் விஜய் ஸ்ரீ ஜி மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். சாருஹாசன் கதாநாயகனாக நடித்த 'தாதா 87' திரைப்படத்தை சில வருடங்களுக்கு முன் விஜய் ஸ்ரீ ஜி இயக்கியது குறிப்பிடத்தக்கது. 'ஹரா' படத்தில் சாருஹாசனின் பங்களிப்பு குறித்து பேசிய இயக்குனர் விஜய் ஸ்ரீ ஜி, "93 வயதில் இந்தளவு உற்சாகத்துடன் நடிக்கும் நடிகர் வேறெங்காவது இருக்க முடியுமா என்பது கேள்விக்குறி தான். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரத்தில் 'ஹரா' படத்தில் சாருஹாசன் சிறப்பாக நடித்துள்ளார்" என்று தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், "டான் என்றாலே எதிர்மறை எண்ணம் வருவது இயல்பு. ஆனால் இப்படத்தில் சமுதாயத்திற்கு நல்லது செய்யும் டான் பாத்திரத்தில் சாருஹாசன் நடித்துள்ளார். அவரது காட்சிகளை எந்த வித சோர்வோ தாமதமோ இல்லாமல் மிகுந்த உற்சாகத்துடன் நடித்து கொடுத்தார். அவருக்கும், அவரது மகள் திருமதி சுஹாசினி மணிரத்னம் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் மிக்க நன்றி," என்று கூறினார். 'ஹரா' திரைப்படத்தை விரைவில் திரைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்று இயக்குனர் விஜய் ஸ்ரீ ஜி தெரிவித்தார்.



## உருவாகிறது ஐஸ்வர்யா ராஜேஷின் 'சுழல் 2'.. எதிர்பார்ப்பில் ரசிகர்கள்

விக்ரம் வேதா படத்தின் இயக்குனர்கள் புஷ்கர் காயத்ரியின் சொந்த பட தயாரிப்பு நிறுவனமான வால் வாட்சர் பிலிம்ஸ் எனும் நிறுவனத்தின் சார்பில் தயாரான முதல் வெப் தொடர் ' சுழல் தி வோர்டெக்ஸ்'. இயக்குனர்கள் பிரம்மா மற்றும் எம்.அனுசரண் இயக்கத்தில் உருவான இந்த வெப் தொடரில் ஆர். பார்த்திபன், கதிர், சந்தானபாரதி, பிரேம், ஐஸ்வர்யா ராஜேஷ், ஸ்ரேயா ரெட்டி, நிவேதா சதீஷ் உள்ளிட்ட பலர்நடித்திருந்தனர். மியூக்ஸ்ஒளிப்பதிவுசெய்திருக்கும் இந்த வெப் தொடருக்கு, சாம் சி எஸ் இசையமைத்துள்ளார். அமேசான் பிரைமில் கடந்த ஆண்டு ஜூன் 17ந் தேதி வெளியான இந்த வெப் தொடர் பல்வேறுதரப்பில்வரவேற்பைபெற்றது. இந்நிலையில், இந்த வெப் தொடரின் இரண்டாம் பாகம் தயாராகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, புஷ்கர் காயத்ரி 'சுழல்' இரண்டாம் பாகத்திற்கு கதை எழுதி வருவதாகவும் விரைவில் படப்பிடிப்பு நடைபெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஜெயிலர் டிரைலர் அதிகாரப்பூர்வ அறிவிப்பு



இயக்குனர் நெல்சன் இயக்கத்தில் ரஜினி தற்போது 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இதில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார் மற்றும் பிரியங்கா மோகன், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்டபலர்முக்கியகதாபாத்திரத்தில்நடித்துள்ளனர். இப்படத்திற்குஅனிருத்இசையமைத்துள்ளார். ஜெயிலர் போஸ்டர் 'ஜெயிலர்' திரைப்படம் வருகிற 10ஆம் தேதி திரையரங்குகளில்வெளியாகவுள்ளநிலையில்படத்தின் மீதானஎதிர்பார்ப்புரசிகர்கள்மத்தியில்அதிகரித்துள்ளது. இதையடுத்து இப்படத்தின் டிரைலர் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'ஜெயிலர்' திரைப்படத்தின் டிரைலர் நாளை வெளியாகவுள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

## விஜய் படத்தில் நடித்ததுதான் நான் செஞ்ச தப்பு மனம் திறந்த தமன்னா



கேடி படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை தமன்னா. அதன்பின்னர் வியாபாரி, அயன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகைகளில் ஒருவராக திகழ்ந்து வருகிறார். பாலிவுட்டிலும் அதிகமான படங்களில் நடித்து வரும் தமன்னா, வெப் சீரிசிலும் நடித்துள்ளார். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான லவ் ஸ்டோரிஸ் 2வில் மிகவும் நெருக்கமான காட்சிகளில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். இந்த வெப் தொடரில் படுக்கை அறை காட்சிகளும் லிப் லாக் காட்சிகளிலும் விஜய் வர்மாவுடன நெருக்கமாக நடித்தார். தமன்னாவிஜய் வர்மாவும் காதலித்து வருவதாகவும் விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளவுள்ளதாகவும் தகவல்கள் பரவி வருகின்றன. ரஜினியுடன் ஜெயிலர் படத்தில் நடித்து வரும் தமன்னா காவாலா பாடலுக்கு ஆடிய நடனம் ரசிகர்களை மிகவும் கவர்ந்தது. இந்நிலையில், நடிகை தமன்னா, விஜய்யுடன் 'சுறா' படத்தில் நடித்தது குறித்து நேர்காணல் ஒன்றில் பேசியுள்ளார். அவர் கூறியதாவது, "சுறா திரைப்படம் எனக்கு பிடிக்கும். ஆனால் அதில் என்னுடைய நடிப்பு மிகவும் மோசமாக இருக்கும். இனிமேல் இப்படியான ஒரு கதாபாத்திரத்தில் நான் நடிக்க மாட்டேன் என்பதை உறுதியாக சொல்கிறேன். 'சுறா' படப்பிடிப்பின்போதே எனக்குத் தெரியும், அது வொர்க்அவுட் ஆகாது என்று. நிறைய படங்களில் நமக்கே தெரியும் இது சரிவராது என்று ஆனால் நடித்து ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்போம். நாங்கள் ஒப்புகொண்டிருக்கும் ஒரு விஷயத்தில் பலரின் பொருளாதாரம் உள்ளிட்டவை சம்பந்தபட்டிருக்கிறது. ஆகவே, கமிட்டாகிவிட்டால் அதில் நடித்தாகவேண்டும். அது வேலையின் ஒரு பகுதி" என்று கூறினார்.

## நடிகர் கவினுக்கு விரைவில் டும்..டும்..டும்.. பொண்ணு யாருன்னு தெரியுமா?



'சரவணன் மீனாட்சி' சீரியலில் நடித்து பிரபலமானவர் நடிகர் கவின். இதையடுத்து படங்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்து வந்த அவர், 'நட்புன்னா என்னான்னு தெரியுமா' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானார்.

அதைத்தொடர்ந்து பிக்பாஸ் நிகழ்ச்சியின் 3வது சீசனில் கலந்து கொண்டார். இதன் பின்னர் வெளியான 'லிஃப்ட்', 'டாடா' போன்ற திரைப்படங்கள் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது. இவர் தற்போது நடன இயக்குனர் சதீஷ் இயக்குனராக அறிமுகமாகும் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். பெயரிடப்படாத இப்படத்தில் அயோத்தி பட நாயகி ப்ரீத்தி அஸ்ரானி கதாநாயகியாக நடிக்க ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் தயாரிக்கிறார். இப்படத்தின் மூலம் அனிருத் முதல் முறையாக கவினுடன் இணைந்துள்ளார். இப்படத்திற்கான எதிர்பார்ப்பு இப்போதே பெருமளவில் உயர்ந்துள்ளது. இந்த நிலையில் இவரது திருமண அறிவிப்பு ரசிகர்களை ஆனந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தனியார் பள்ளியில் பணியாற்றி வரும் மோனிகா என்பவரை காதலித்து வந்தார் கவின். மிக ரகசியமான இவர்களின் காதல் தற்போது இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் கட்டத்தை எட்டியுள்ளது. இவர்களின் திருமணம் அனைவரின் ஆசியுடன் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதி கோலாகலமாக நடைபெறவுள்ளது.

## 3வது ஒருநாள் போட்டியில் அபார வெற்றி வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான தொடரை 2-1 என கைப்பற்றியது இந்தியா




இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதிய 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி டிரினிடாட்டில் நடைபெற்றது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 351 ரன்களை குவித்தது. சுப்மன் கில் 85 ரன்னிலும், இஷான் கிஷன் 73 ரன்னிலும், சஞ்சு சாம்சன் 51 ரன்னிலும் அவுட்டாகினர். கடைசி வரை நின்ற ஹர்திக் பாண்ட்யா அதிரடியாக ஆடி 70 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இதையடுத்து, 352 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் அணி களமிறங்கியது. ஆரம்பம் முதலே இந்தியபந்துவீச்சாளர்கள்துல்லியமாகபந்துவீசினர். இதனால்சீரானஇடைவெளியில் வெஸ்ட் இண்டீஸ் விக்கெட்டுகள் வீழ்ந்தன. கடைசி கட்டத்தில் அல்ஜாரி ஜோசப், குடகேஷ் மோட்டி ஆகியோர் போராடினர். 9வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 55 ரன்கள் சேர்த்தது. அல்ஜாரி ஜோசப் 26 ரன்கள் எடுத்தார். இந்த ஜோடியால் வெஸ்ட் இண்டீஸ் அணி 140 ரன்களைக் கடந்தது. இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் அணி 151 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அந்த அணியின் குடகேஷ் மோட்டி 39 ரன்னும், ஆலிக் அதானசே 32 ரன் எடுத்தனர். இதன்மூலம் 200 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. அத்துடன் ஒருநாள் தொடரை 2-1 என கைப்பற்றி அசத்தியது. இந்தியா சார்பில் ஷர்துல் தாக்குர் 4 விக்கெட்டும், முகேஷ் குமார் 3 விக்கெட்டும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

## பெண்கள் உலக கோப்பை கால்பந்து: வியட்நாம் அணியை 7-0 என்ற கணக்கில் வீழ்த்தியது நெதர்லாந்து



பெண்கள் உலக கோப்பை கால்பந்து போட்டி நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. பி மற்றும் சி பிரிவில் லீக் ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் பி பிரிவில் ஆஸ்திரேலியா, நைஜீரியா மற்றும் சி பிரிவில் ஜப்பான், ஸ்பெயின் ஆகிய அணிகள் அடுத்த கட்டத்துக்கு முன்னேறியுள்ளனர். இந்நிலையில் இன்று இ பிரிவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வியட்நாம் மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின. ஆட்டம் தொடங்கிய 8வது நிமிடத்தில் கோல் போட ஆரம்பித்த நெதர்லாந்து அணி சீரான இடைவெளியில் தொடர்ந்து கோல்களை பதிவு செய்தனர். இறுதியில் நெதர்லாந்து அணி 7 கோல்களை பதிவு செய்தது. கடைசி வரை போராடிய வியட்நாம் அணி ஒரு கோல் கூட போட முடியாமல் தோல்வியடைந்தது. இந்த பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில்அமெரிக்காமற்றும்போர்ச்சுகல்அணிகள்மோதின. இந்தபோட்டியில் 0-0 என்ற கணக்கில் போட்டி டிரா ஆனது. இதன் மூலம் இ பிரிவில் வியட்நாம் மற்றும் போர்ச்சுகல் அணி வெளியேறியது. நெதர்லாந்து மற்றும் அமெரிக்க அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

## தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைப்பாரா சிந்து? ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் தொடக்கம்




மொத்தம் ரூ.3½ கோடி பரிசுத் தொகைக்கான ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டி சிட்னியில் 6ந் தேதி வரை நடக்கிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில், முன்னாள் உலக சாம்பியனான இந்திய வீராங்கனைபி.வி.சிந்துசகநாட்டுவீராங்கனைஅஷ்மிதா சாலிஹாவை சந்திக்கிறார். கடந்த ஒரு வருடமாக தொடர்ந்து சறுக்கலை சந்தித்து வரும் சிந்து இந்த மாதம் இறுதியில்நடைபெறும்உலகசாம்பியன்ஷிப்போட்டிக்கு முன்பாக மீண்டும் நல்ல நிலைக்கு திரும்ப இந்த போட்டியைசரியாகபயன்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகும். ஸ்ரீகாந்த், லக்ஷயா சென், பிரனாய், பிரியான்ஷூ ரஜாவாத் ஆகிய இந்தியர்களும் களம் இறங்குகிறார்கள். ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்த சீசனில் 4 பட்டங்கள் வென்று அசத்திய இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ் ரங்கி ரெட்டிசிராக் ஷெட்டி இணை உலகசாம்பியன்ஷிப் போட்டிக்கு தயாராகும் பொருட்டு இந்த போட்டியில் இருந்து விலகி இருக்கிறது.

## ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி தென்கொரியா, ஜப்பான் அணிகள் சென்னையில் தீவிர பயிற்சி




ஹாக்கி இந்தியா மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து நடத்தும் 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் வருகிற 3ந் தேதி முதல் 12ந் தேதி நடக்கிறது. இந்த போட்டியில் நடப்பு சாம்பியன் தென்கொரியா, முன்னாள் சாம்பியன்கள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மலேசியா, சீனா, ஜப்பான் ஆகிய 6 அணிகள் கலந்து கொள்கின்றன. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும். 16 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் நடைபெறும் இந்த சர்வதேச ஹாக்கி போட்டிக்காக எழும்பூர் ஸ்டேடியம் நவீன வசதிகளுடன் சர்வதேச தரத்தில் புதுப்பொலிவு பெற்றுள்ளது. போட்டிக்கான இறுதி கட்ட ஆயத்த பணிகளை போட்டி அமைப்பாளர்கள் தடபுடலாக செய்து வருகின்றனர். இந்த போட்டியை தமிழகத்தின் எல்லா பகுதியிலும் உள்ள ரசிகர்களும் கண்டுகளிக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (எஸ்.டி.ஏ.டி.) நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் போட்டியின் நேரடி ஒளிபரப்பை மெகா திரையில் பார்த்து ரசிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. போட்டிக்கான ஏற்பாடுகள் ஒருபுறம் வேகமாக நடந்து கொண்டிருக்கும் நிலையில், இந்த போட்டியில் பங்கேற்கும் அணிகள் தங்களை தயார்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் பங்கேற்க முதல் அணியாக மலேசியா கடந்த சனிக்கிழமை சென்னை வந்தது. இதைத்தொடர்ந்து தென்கொரியா, ஜப்பான் அணிகள் நேற்று முன்தினம் இரவு வந்தடைந்தன. விமான நிலையத்தில் இரு அணியினருக்கும் எஸ்.டி.ஏ.டி., ஹாக்கி இந்தியா சார்பில் உற்சாமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்பெயின் நாட்டில் நடந்த 4 நாடுகள் போட்டியில் கலந்து கொண்டு 3வது இடத்தை பிடித்த ஹர்மன்பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி இன்று அதிகாலை விமானம் மூலம் சென்னை வந்து சேருகிறது. சீனா, பாகிஸ்தான் அணிகள் இரவில் வந்தடைகின்றன. இதற்கிடையே, சென்னை எழும்பூரில் உள்ள ஹாக்கி ஸ்டேடியத்தில் நேற்று மாலை 3.30 முதல் 4.30 மணி வரை தென்கொரியா அணியினர் பயிற்சி மேற்கொண்டனர். இதைத்தொடர்ந்து ஜப்பான், மலேசியா அணிகள் தலா ஒரு மணி நேரம் தீவிர பயிற்சியில் ஈடுபட்டன. முன்னதாக தென்கொரியா அணியின் தலைமை பயிற்சியாளர் சியோக் யோ ஷின் கூறுகையில், 'இந்த போட்டி எங்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். அடுத்த ஆண்டு பாரீசில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி சுற்றான ஆசிய விளையாட்டுக்கு சிறந்த முறையில் தயாராக இந்த சாம்பியன்ஸ் கோப்பை போட்டியை பயன்படுத்தி கொள்வோம். ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துதே எங்களது நோக்கமாகும்' என்றார்.

## இந்திய மல்யுத்த சம்மேளன தேர்தலில் பிரிஜ் பூஷன் ஆதரவாளர்கள் 18 பேர் போட்டி

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இந்திய மல்யுத்த சம்மேளன நிர்வாகிகள் தேர்தல் வருகிற 12ந்தேதி டெல்லியில் நடக்கிறது. நாளை வேட்பு மனு பரிசீலனையும், 7ந்தேதி இறுதிவேட்பாளர் பட்டியலும் வெளியிடப்படுகிறது. 12 ஆண்டுகள் மல்யுத்த சம்மேளன தலைவராக நீடித்த பா.ஜ.க. எம்பி. பிரிஜ் பூஷன் சரண் சிங், தேசிய விளையாட்டு கொள்கையின்படி இந்த தேர்தலில் போட்டியிட முடியாது. அது மட்டுமின்றி சில மல்யுத்த வீராங்கனைகள் அவர் மீது பாலியல் புகார் கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து டெல்லி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சர்ச்சை எதிரொலியாக மல்யுத்த சம்மேளனத்தின் அன்றாட பணிகளில் இருந்து ஏற்கனவே ஒதுங்கி விட்டார். ஆனாலும் தனது விசுவாசிகள் மூலம் முக்கிய பதவிகளை கைப்பற்றி விட வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்கிறார். 25 மாநில மல்யுத்த சங்கங்களில் 22 சங்கங்கள் தங்கள் பக்கம் இருப்பதாக ஆலோசனை கூட்டத்துக்கு பிறகு தெரிவித்தார். வேட்பு மனு தாக்கல் செய்ய நேற்று கடைசி நாளாகும். தலைவர், துணைத் தலைவர்கள், பொருளாளர், பொதுச் செயலாளர், இணைச் செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பதவிகளுக்கு பிரிஜ் பூஷனின் ஆதரவாளர்கள் மொத்தம் 18 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். அவரது ஆதரவாளர் சஞ்சய் குமார் சிங் தலைவர் பதவிக்கு நிறுத்தப்பட்டுள்ளார். ஆனால் பிரிஜ் பூஷன், தனது குடும்பத்தில் இருந்து யாரும் மல்யுத்த சம்மேளன நிர்வாகிகள் தே'தலில் போட்டியிடமாட்டார்கள் என்று நேற்று திட்டவட்டமாக தெரிவித்தார். அவரது மகன் கரண் பிரதாப், மருமகன் விஷால் சிங் மாநில மல்யுத்த சங்கங்களில் பொறுப்புகளில் இருந்தாலும் அவர்கள் தேர்தல் களத்தில் இல்லை.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.